மருத்தவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (23.09.2024) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் உறுப்பு தான தினம் 2024 நிகழ்ச்சியில், உடல் உறுப்பு மாற்று விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டார்கள். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரப்பாக்கம் கணபதி, அரவிந்த் ரமேஷ், அசன் மௌலானா, பிரபாகர் ராஜா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.இராஜ மூர்த்தி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், வடக்கு போக்குவரத்து காவல்துறை துணை ஆணையர் குமார், அனைத்து மருத்துவக் கல்லூரி முதல்வர்கள், மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று (23.9.2024) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதுப்பிப்பு பணிகள் மற்றும் நவீன முறையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, சட்டமன்ற உறுப்பினர் மரு.நா. எழிலன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் பொதுப்பணித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு செய்தி – மக்கள் தொடர்புத் துறை சார்பில்

6 பத்திரிகையாளர்களுக்கு ரூபாய் பத்து இலட்சம் மருத்துவ நிதி!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, செப்.24- முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பத்திரிகையாளர் நலநிதித் திட்டத்தின் கீழ் நேற்று (23.9.2024) தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலகத்தில் உடல் நலம் குன்றி மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்ட 6 பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் 10 இலட்சத்து ஆயிரத்து 206 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் 14.1.2008 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி புதிய திட்டமாக பத்திரிகையாளர் நல நிதியம் உருவாக்கப்பட்டது. அன்று அரசின் 1 கோடி ரூபாய் முதலீட்டுடன் தொடங்கப்பட்ட பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி வழங்கிட வழி செய்யப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பத்திரிகையாளர் நல நிதித் திட்டத்தின் கீழ் 19.7.2022 அன்று பிறப்பித்த அரசாணையின்படி பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் போது ஏற்படும் மருத்துவச் செலவினை ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் அவர்களுக்கு நிதியுதவியாக ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரம் வரையும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதித் தொகையிலிருந்து 50 சதவிகித தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில், தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (23.9.2024) சென்னை தலைமைச் செயலகத்தில் 6 பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவியாக மொத்தம் ரூ.10, 01,206/க்கான காசோலைகளை வழங்கினார். மேலும், செய்திமக்கள் தொடர்புத்துறை மூலமாக கடந்த 2021 முதல் தற்போது வரை பத்திரிகையாளர் நல நிதித் திட்டத்தின் கீழ் 13 பத்திரிகையாளர்களுக்கு மொத்தம் ரூ.25,11,339/ம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று (24.09.2024) காலை அணைக்கட்டு ஒன்றியத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

இடம் மற்றும் ஊராட்சி	நேரம்
புத்தூர் ஊராட்சி	காலை 8.00 மணி
பொய்கை ஊராட்சி	காலை 8.15 மணி
சத்தியமங்கலம் ஊராட்சி	காலை 9.00 மணி
இலவம்பாடி ஊராட்சி	காலை 9.15 மணி
மருதவல்லிபாளையம் ஊராட்சி	காலை 9.30 மணி
வல்லண்டராமம் ஊராட்சி	காலை 10.00 மணி
வசந்தநடை ஊராட்சி	காலை 10.15 மணி
செதுவாலை ஊராட்சி	காலை 10.30 மணி
விரிஞ்சிபுரம் ஊராட்சி	காலை 10.45 மணி
இறைவன்காடு ஊராட்சி	காலை 11.00 மணி
கழனிப்பாக்கம் ஊராட்சி	காலை 11.25 மணி
கந்தனேரி ஊராட்சி	காலை 11.30 மணி
ஊனை ஊராட்சி	காலை 11.45 மணி
கெங்கநெல்லூர் ஊராட்சி	பகல் 12.00 மணி
அணைக்கட்டு ஊராட்சி	பகல் 12.15 மணி
அப்புக்கல் ஊராட்சி	பகல் 12.30 மணி
ஊனை வாணியம்பாடி ஊராட்சி	பகல் 12.45 மணி
ஓதியத்தூர் ஊராட்சி	பகல் 1.00 மணி
கரடிகுடி ஊராட்சி	பகல் 1.15 மணி
தேவிசெட்டிகுப்பம் ஊராட்சி	பகல் 1.30 மணி
பிராமணமங்கலம் ஊராட்சி	மாலை 3.00 மணி
கீழ் கிருஷ்ணாபுரம் ஊராட்சி	மாலை 3.15 மணி
திப்பசமுத்திரம் ஊராட்சி	மாலை 3.30 மணி
கருங்காலி ஊராட்சி	மாலை 3.45 மணி
மகதுபுரம் ஊராட்சி	மாலை 4.00 மணி
ஓங்கப்பாடி ஊராட்சி	மாலை 4.30 மணி
வரதலம்பட்டு ஊராட்சி	மாலை 4.45 மணி
கீழ்கொத்தூர் ஊராட்சி	மாலை 5.00 மணி
பின்னத்துறை ஊராட்சி	மாலை 5.30 மணி
சேர்பாடி ஊராட்சி	மாலை 6.00 மணி
நேமந்தபுரம் ஊராட்சி	மாலை 6.30 மணி
அத்திகுப்பம் ஊராட்சி	மாலை 6.45 மணி
மடையப்பட்டு ஊராட்சி	இரவு 7.00 மணி
வன்னந்தாங்கல் ஊராட்சி	இரவு 7.15 மணி
மேல்அரசம்பட்டு	இரவு 7.45 மணி

சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி 119 –வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமையில், வே.கமலா செழியன் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு சிறப்புரையாற்றினார். உடன் ஆர்.என்.துரை, வி.என்.ராஜன், சுபேர்கான், ஆபிஸ்யுல்லா மற்றும் வட்டச் செயலாளர் க.வே.மோகன் பேசினார்.

முதலமைச்சர் குறித்து மோசமாக அவதூறு பேச்சு மன்னிக்க முடியாதது!

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவும் உத்தரவு!

சென்னை, செப்.24 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது அவதூறாக பேசிய வழக்கில் சி.வி.சண்முகம் எம்.பி.க்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யவும் உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம். தற்போது இவர் மாநிலங்களவை எம்.பி.யாக பதவி வகிக்கிறார். இவர் தமிழ்நாடு அரசு மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மீது அவதூறாக பேசியதாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கு தற்போது விழுப்புரம் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு விசாரணைக்கு தடை விதிக்கக் கோரி சி.வி.சண்முகம் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது சி.வி.சண்முகத்திற்கு உச்சநீதிமன்ற நீதிபதி கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதுகுறித்து நீதிபதி கூறும்போது, “நீங்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை படிக்கும் போதே மிக மோசமாக உள்ளது. மக்கள் பிரதிநிதியாக இருந்துகொண்டு உங்களால் எப்படி மிகவும் கொச்சையாக பேசுகிறீர்கள். நீங்கள் செய்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம். எனவே இந்த வழக்கை ஏன் ரத்து செய்ய வேண்டும். நீங்கள் பேசிய பேச்சுக்கு ஏன் மன்னிப்புக் கேட்கக் கூடாது?

எனவே நீங்கள் பேசிய அவதூறு பேச்சுக்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். உங்கள் தவறை உணராத பட்சத்தில் இந்த வழக்கை நீங்கள் எதிர்கொள்ள நேரிடும் என கண்டனம் தெரிவித்தார். மேலும் “இனி மேல் இதுபோன்று பேசமாட்டேன் என்று பிரமாண பத்திரமும் தாக்கல் செய்ய வேண்டும்” என உத்தரவிட்டார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்கள்!

மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருவள்ளூர், செப்.24 திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக ஒருங்கிணைப்புக் குழு ஆய்வுக் கூட்டத்தில் மாநில இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக பொறியாளர் அணியின் ஒன்றிய, நகர, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணிக்கு நிர்வாகிகளை விண்ணப்பம் மூலம் தேர்வு செய்திட கழக பொறியாளர் அணிச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்புக்கு இணங்க திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி நிர்வாகிகள் பொறுப்புக்கு விருப்பமுள்ளவர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்திட வேண்டும்.

அதற்கென பிரத்யோக QR Code உருவாக்கப்பட்டுள்ளது. இந்த QR Code ஆனது திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்திலும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

ஒன்றியம், நகரம்,பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பதவிக்கும் BE அல்லது டிப்ளமோ படித்திருக்க வேண்டும்.

கல்லூரியில் பொறியியல் பட்டயபடிப்பு (டிப்ளமோ) மற்றும் ஐ.டி.ஐ படித்துக் கொண்டிருக்கும் ஆண்கள், பெண்கள் இருவரும் விண்ணப்பம் செய்யலாம். இதில் புதியவர்களும் தன்னை இணைத்து கொண்டு பொறுப்புகளை பெறலாம்.

ஒன்றிய, நகர, பேரூர் கழக அளவில் பொறியாளர் அணி அமைப்பாளர் ஒருவரும், துணை அமைப்பாளர்களாக ஐந்து பேரும் தேர்வு செய்யப்படுவார்கள்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நடைபெறும் பொறியாளர் அணி நிர்வாகிகளுக்கான பொறுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கு உட்பட்ட பொறியாளரணி தோழர்கள் விண்ணப்பம் செய்திடவும், அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திடவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேனி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்

செஞ்சுரி செல்வம் தாயார் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி.

தேனி , செப். 24 - தேனி மாவட்டம் முன்னாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவரும், முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், இப்கோ சிறப்பு பிரதிநிதியுமான செஞ்சுரியின் மனைவியும், தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் தாயாருமான பாப்பா அவர்கள் மறைவையொட்டி, ஆண்டிபட்டி அருகே உள்ள அணைக்கரைப்பட்டி அவரது கிராம இல்லத்தில் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி, மகாராஜன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில செயல் திட்ட குழு உறுப்பினர் மூக்கையா, உள்பட கழக ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட மூத்த கழக முன்னோடிகள் அனைவரும் வந்திருந்து அஞ்சலி செலுத்தினர்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு

மாநகர, ஒன்றிய, நகர,பகுதி, பேரூர் கழகங்களுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு மாநகர,ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் பொறுப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளின் படி விண்ணப்பிக்க வேண்டும்

1.விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு / பட்டய படிப்பு நிறைவு செய்தவராக இருக்க வேண்டும்.

2.விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதியின் வாக்காளராக இருத்தல் அவசியம்.

3.ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் எனும் அளவுக்கு மிகாமல் பொறுப்புகள் நியமிக்கப்படுகின்றனர்.

4.பெண் பொறியியல் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5.விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளர் அணியின் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

6.விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தாரர்களை நேரில் அழைத்து நேர்முகத் தேர்வு நடைபெறும்.

ஆகவே மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணிநிர்வாகிகள் மேற்கண்ட விதிமுறைகளின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
செயலாளர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

சென்னை வடக்கு மாவட்டம்

பகுதி கழகச் செயலாளர்கள் கூட்டம்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டம் பகுதி செயலாளர்கள் கூட்டம் (26.09.2024 - வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில் எண்.1 சர்மா நகர், 1வது மெயின் ரோட்டில் உள்ள (எனது அலுவலகத்தில்) மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிகழக செயலாளர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொருள்: 28.09.2024 அன்று காஞ்சிபுரத்தில் அனைத்துகட்சி தலைவர்கள் பங்குபெறும் கழக பவள விழா பொது கூட்டம், கழகஆக்க பணிகள்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.